## யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம்

# பரிசுத் தினம்

## 01.12.2016

# யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம்

# பரிசுத் தினம் – 2016

தலைவர்

**திரு. மு. முரளிதரன்** (அதிபர்)

பிரதம விருந்தினர்

**திரு. முத்து இராதாகிருஸ்ணன்**

(கல்விப் பணிப்பாளர், வவுனியா வடக்கு வலயம்)

சிறப்பு விருந்தினர்

**திரு. சிதம்பரப்பிள்ளை மாணிக்கராஜா**

(பிரதிக் கல்விப்பணிப்பாளர்,

வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.)


இடம் : பாடசாலை பிரதான மண்டபம்

காலம் : 01.12.2016

# பாடசாலைக் கீதம்

வாழிய வாழிய வாழிய தினமே
சீரிய யாழ்நகர் திருசேர்
சன்மார்க்க மகா வித்தியாலயம்
சாலமும் நலமே நலமே
செந்தமிழ் ஆங்கிலம் சிவநெறி ஓதி
சுந்தர அறிவொளி காட்டி
உயர்தரும் கலைகளைப் போற்றி
ஊரெங்கும் திருப்பணி ஆற்றி

பாலும் தேனும் போலும் பண்புறு
மாணவர் உயர்வுறவாக்கி
பாங்குடன் அவர்களை ஊக்கி
வாழி வாழி வாழி
வாழிய வாழியவே
சன்மார்க்கம் வாழிய வாழியவே!
வாழிய வாழியவே
சன்மார்க்கம் வாழிய வாழியவே!



## மகுடவாசகம் (Moto)

## கற்க கசடற

## தூர நோக்கு (Vision)

**சவால்களை எதிர்கொள்ளக் கூடியதும்,**

**சமூகப் பொருத்தப்பாடு உடையதுமான**

**பிரஜைகள் உருவாதல்**

## பணிக்கூற்று (Mission)

**மொழியை செம்மையாக பயன்படுத்த எண், எழுத்துத்திறன், வாசிப்புத்திறன் தேர்ச்சிகளை பெற்றுக் கொடுப்பதுடன், கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை கடைப்பிடிக்க வழிப்படுத்தி, சமூகத்திற்கு பொருத்தப்பாடுடைய ஒழுக்க சீலர்களை உருவாக்கம் செய்தல்.**



# எங்கள் அதிபர்




திரு மு. முரளிதரன் B.A , M.Ed., SLPS II

# அதிபர் அறிக்கை

யா/சன்மார்க்க மகா வித்தியாலயத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான பரிசளிப்புவிழாவைச் சிறப்பிக்க வந்திருக்கும் பிரதம விருந்தினர் மதிப்பிற்குரிய எமது பாடசாலையின் பழைய மாணவர் திரு.முத்து . இராதாகிருஸ்ணன் அவர்களே! இன்றைய விழாவைச் சிறப்பிக்க வந்திருக்கும் இப் பாடசாலையின் முன்னாள் அதிபரும் தற்போதைய யாழ் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளருமாகிய திரு. சி.மாணிக்கராசா அவர்களே! அயற்பாடசாலை அதிபர்களே! பெற்றோர்களே! பழைய மாணவர்களே! நலன்விரும்பிகளே மதிப்பிற்குரிய ஆசிரியர்களே! அன்பார்ந்த மாணவச் செல்வங்களே! அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைய நாள் இப்பாடசாலையின் வரலாற்றில் முக்கியமான ஒரு நாளாகும். எமது பாடசாலையின் பழையமாணவரும் தற்போது வவுனியாதெற்கு வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய திரு.முத்து .ராதாகிருஸ்ணன் அவர்கள் இந்தப் பாடசாலையின் கௌரவத்திற்குரிய ஒருவராவார். அவரை நாம் பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக அழைத்தபோது மனமுவந்து சம்மதம் தெரிவித்ததையிட்டு எமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். பிரதம விருந்தினர் அவர்களே! நீங்கள் ஆரம்பக்கல்வியை பரமேஸ்வரா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை யா/சன்மார்க்க மகா வித்தியாலயத்திலும் கற்றீர்கள். 1982 ஆம் ஆண்டில் ஆசிரிய நியமனம் பெற்று யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கடமைபுரிந்தீர்கள். 1998 ஆம் ஆண்டில் கல்வி நிர்வாக சேவைக்குத் தெரிவாகி அதன் பின்னர் வடக்கு,கிழக்கு மாகாண ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராகவும், பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும், வடக்கு மாகாணத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகவும், சேவையாற்றினீர்கள். 2016

ஆவணி மாதம் முதல் வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளராக சிறப்புறு சேவையை வழங்கி வருகின்றீர்கள். தாங்கள் நாடகம், கல்வி, சிறுவர் இலக்கியங்கள் என்றவகையில் 15 நூல்களை ஆக்கித் தந்துள்ளீர்கள். இதன் பயனாக 5 தடவைகள் தேசிய சாகித்திய பரிசும், 8 தடவைகள் வடக்கு கிழக்கு மாகாண சாகித்திய பரிசும் பெற்று சிறந்ததொரு ஆக்க இலக்கிய கர்த்தாவாகவும், சிறந்த கல்விமானாகவும் திகழ்கின்றீர்கள்.

"நிறைகுடம் தளம்பாது" என்னும் முதுமொழிக்கேற்ப அமைதியுடனும் தன்னடக்கத்துடனும் விளங்கும் தங்களுக்கு கிடைத்த செல்வங்களான மகள் வைத்தியராகவும், மகன் சிறந்த முறையில் கல்விகற்றும் வருவது தங்கள் சேவைக்குக் கிடைத்த பரிசாகும். இத்தகைய சிறப்புக்கள் மிக்க தாங்கள் இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்ததையிட்டு பேருவகை கொள்கின்றோம்.

சிறப்பு விருந்தினர் திரு.சிதம்பரப்பிள்ளை. மாணிக்கராஜா அவர்கள் கொடிகாமத்தில் கல்விகற்று கண்டாவளை மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக, அதிபராக கடமையாற்றி, யா/சென் சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் பிரதி அதிபராகவும், யா/சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் அதிபராகவும் கடமையாற்றி, பின்னர் கல்வி நிர்வாகசேவைக்குத் தெரிவாகி, நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளராக மிளிர்ந்து, தற்போது யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றுகின்றீர்கள். நீங்கள் சிறப்பு விருந்தினராக வருகை தந்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்தப் பாடசாலையின் வளர்ச்சியில் பல்வேறு அதிபர்கள் தங்கள் காலத்தில் தங்களால் இயன்ற சிறப்பான பணிகளை ஆற்றிச் சென்றிருக்கின்றார்கள். அவர்களுக்கு சிரம்பணிந்து நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அந்த வகையில் திரு. மு. பாஸ்கரதேவன், திரு.க.மகேசன், திரு.சி.நடேசபிள்ளை, திரு.க.தங்கராசா, திரு.து.நடராஜலிங்கம், திரு.சி.மாணிக்கராஜா, திருமதி.மி.விமலநாதன் போன்றோர் இந்தப் பாடசாலைக்காக பல சிறப்பான சேவைகளை வழங்கியுள்ளனர்.

எமது பாடசாலையில் ஏறக்குறைய கால் நூற்றாண்டு வரையில் ஆசிரியராக, உபஅதிபராக பணியாற்றி, இப் பாடசாலையின் வளர்ச்சியில் பல்வேறு வகையிலும் உதவியளித்து, தற்போது ஓய்வு பெற்றுச் சென்ற செல்வி முத்துக்குமாரசாமி செல்வராணி அவர்களின் அர்ப்பணிப்புள்ள சேவையை மகிழ்ச்சியோடு நினைவுகூரும் அதேவேளை, இப் பாடசாலையில் பணியாற்றி வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள், மற்றும் கல்விசாரா ஊழியர்கள் இப் பாடசாலைக்கு செய்த சேவையையும் இந்நேரத்தில் பாராட்டிநிற்கின்றேன். செல்வி கோ.ரேணட் அவர்கள் இப் பாடசாலையில் கிறிஸ்தவம் போதிக்க ஆசிரியர் இல்லாத காலத்தில் எமக்கு நல்லுதவிபுரிந்துள்ளதுடன் பல்வேறு செயற்பாடுகளிலும் பாடசாலைக்கு உதவி வருகின்றார். அவர் ஒரு பட்டதாரியாவார்.அவரது நல்வாழ்வுக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

எமது பாடசாலையைப் பொறுத்த வரை பாடசாலை ஆசிரியர்களின் மிகுந்த அர்ப்பணிப்பான சேவையே மாணவர்களின் பண்புத்தரரீதியான மேம்பாட்டிற்கு உதவிநிற்கின்றது. பல ஆசிரியர்கள் பாடசாலை நேரத்திற்கு மேலதிகமாக காலையிலும் மாலையிலும் விடுமுறை காலங்களிலும் மேலதிக வகுப்புக்களை நடாத்துகின்றனர். எமது மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வது மிகக் குறைவாகவே உள்ளது. அவர்கள் எமது ஆசிரியர்களையே பூரணமாக நம்பியிருக்கின்றனர். பாடசாலைச் செயற்பாடுகளுக்கு உப அதிபரும் பக்க பலமாக செயற்படுவதும் குறிப்பிடத்தக்கது. பாடசாலையின் வளர்ச்சியிலும், மாணவர்களின் முன்னேற்றத்திலும் கரிசனையுடன் செயற்படும், தமிழ்ப் பாடம் கற்பிப்பதில் தனக்கென தனியானதொரு இடத்தை வகிக்கும் ஆசிரியை செல்வி. மாலினி சின்னத்தம்பி இப் பாடசாலையில் ஏழு வருட சேவையை நிறைவுசெய்து, வரும் ஜனவரி மாதம் இடமாற்றம் பெற்றுச் செல்ல இருப்பதும் எமக்குப் பெரியதொரு இழப்பாகும்.

யா/சன்மார்க்க மகா வித்தியாலயம் க.பொ.த உ/த வரையுள்ள 1சி பாடசாலையாகும் இப் பாடசாலை மிக வசதியான ஒரு இடத்தில் அமைந்திருப்பதும் ஆலயச் சூழலில் அமைந்திருப்பதும்.

சிறப்பம்சமாகும். ஆனாலும் இப் பாடசாலையின் முக்கியத்துவத்தை இப் பிரதேசத்திலுள்ள பலர் உணராமல் இருப்பது வருத்தத்திற்குரிய ஒன்றாகும். ஒரு பிரதேசத்தின் சிறப்பு அப் பிரதேசத்திலுள்ள பாடசாலையின் பெருமையில் தான் தங்கியுள்ளது. எனவே இப் பிரதேசமக்கள் இன்னொரு பிரதேசத்தைச் சிறப்பிப்பதைப் பார்க்கிலும் தமது பிரதேசத்தைச் சிறப்பிப்பது அவர்களுக்கே பெருமையாக அமையும் . இப் பாடசாலை நிறைந்த பௌதிக வளங்களைக் கொண்டது. தரமான அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களைக் கொண்டது. பாடசாலையில் ஆன்மீகச் செயற்பாடுகளுக்கும் மனித விழுமியச் செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து மாணவர்கள் சிறந்த பிரஜைகளாக வழிப்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறானதொரு சூழ்நிலையில் உங்கள் பிரதேசத்தின் கௌரவத்தை மேலும் உயர்த்தும் வகையில் இப் பிரதேசப் பெற்றோர் தமது பிள்ளைகளை இங்கே சேர்த்து தமது பிள்ளைகளைத் தாமே நேரடியாகக் கண்காணித்து நற்பிரஜைகளாக உருவாக்க முடியும். பாடசாலை தனது சிறப்புக்களை இழந்தபின் பாடசாலையின் வளர்ச்சிக்காகப் போராடத் துடிப்பது மிகக் கடினமான ஒன்றாக அமையும். இப் பாடசாலையில் கல்விகற்ற பலர் கல்வித் துறையில் சிறந்து விளங்குகின்றனர். யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த வர்த்தகர்கள் பலர் இப் பாடசாலையின் பழைய மாணவர்களாவர். எனவே இப் பிரதேசப் பெற்றோர் தங்கள் பாடசாலையின் சிறப்பை உணர்ந்து தங்கள் பிரதேச பாடசாலையின் சிறப்பை மேன்மையடையச் செய்ய முன்வரவேண்டும். இப் பாடசாலையின் பெயரை “வெங்கடேச மகா வித்தியாலயம்” என மாற்றியமைக்க வேண்டும் எனப் பலர் கோருகின்றனர். அதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்வதற்கு மாணவர் தொகையை அதிகரித்துத் தரவேண்டியது இப் பிரதேச மக்களது பொறுப்பாகும்.

தற்போது பல்வேறு வகையிலும் பாடசாலையின் சிறப்பு மேலோங்கியுள்ளது. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 2005 ஆம் ஆண்டின் பின்னர் 2014 .ல் மூன்று மாணவர்களும் 2015 இல் ஒரு மாணவரும் சித்தியடைந்துள்ளனர். க.பொ.த (உ/த) பரீட்சையில் 2014 ஆம் ஆண்டில் 100% சித்தியைப் பெற்றதுடன் 20 மாணவர்களுக்குக் குறைவாகத் தோற்றிய பாடசாலைகளுள் கலை வர்த்தகப் பிரிவில்

வடமாகாணத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றமைக்கான விருது மாகாணக் கல்வித் திணைக்களத்தால் எமக்கு வழங்கப்பட்டது. 2014 இன் கணிப்பீட்டின்படி கடந்த ஆண்டு கல்வியமைச்சினால் தரமான கற்பித்தற் செயற்பாட்டிற்கான (**BEST PRACTICES**) விருது எமது பாடசாலைக்குக் கிடைத்தது. 2014 ஆம் ஆண்டுக் கணிப்பின்படி சிறந்த கனிஸ்ட விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கான விருது எமது பாடசாலைக்குக்கிடைத்தது. 2014 ஆம் ஆண்டு பிரிட்டிஸ் கவுன்சிலால் வழங்கப்பட்ட சர்வதேச விருது எமக்குக்கிடைத்தது. 2015 ஆம் வருடத்திலும் க.பொ.த (உ/த) பரீட்சையில் 100**%** சித்தியைப் பெற்றதுடன், 3**A** எடுத்த ஒரு மாணவி ந.கீர்த்திகா மாவட்ட மட்டத்தில் 9 ஆம் இடத்தையும்பெற்று யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகியுள்ளார்.

இவ்வாண்டு நடைபெற்ற கதாப்பிரசங்கப் போட்டியில் பங்குபற்றிய எமது மாணவர்களில் செல்வன் சுபாங்கன் வலய மட்டத்தில் முதலாவதாகத் தெரிவாகியதுடன், மாகாணமட்டப் போட்டியில் இரண்டாமிடத்தையும் பெற்று எமது பாடசாலைக்குப் பெருமையைத் தேடித் தந்துள்ளார். 2016 ஆம் வருடத்தில் நல் அதிபருக்கான விருது (குரு பிரதிபா பிரபா) இப் பாடசாலை அதிபர் என்ற வகையில் எனக்குக் கிடைத்தது.

இவ் ஆண்டு பகவான் சத்திய சாயி பாபாவின் மனித மேம்பாட்டுக் கல்வி தொடர்பான கண்காட்சி எமது பாடசாலையில் 3 நாள்கள் நடைபெற்றது. இந்நிகழ்வில் பகவானுடன் நெருங்கிய தொடர்பையும், அவருடைய ஆசீர்வாதங்களையும் பெற்ற பெரியவர்கள் பலர் இப் பாடசாலைக்கு வந்து வாழ்த்திச் சென்றமை இப் பாடசாலை செய்த தவப் பயனாகும். ஆகவே இப் பாடசாலையின் எதிர்காலம் சிறக்கும் என்பது எனது நம்பிக்கை. எதிர்காலத்தில் எமது பாடசாலையின் மாணவர்வளத்தையும், இப் பாடசாலையின் எதிர்காலத்தையும் சிறப்புற நிலைநிறுத்துவது இப்பாடசாலை சமூகத்தின் பொறுப்பாகும்.

# பாடசாலை வரலாறு

## யா/ சன்மார்க்க மகா வித்தியாலய வரலாறு

வடக்கே அரசடிப் பிள்ளையார் கோவிலின் தெற்கு மதிலையும் தெற்கே யாழ்பாடி வீதியையும் மேற்கே மணிக்கூட்டுவீதியையும், எல்லைகளாகக் கொண்டமைந்துள்ள கட்டடத்தில்''சுப்பர் பள்ளிக்கூடம்'' என்ற பெயருடன் இயங்கிவந்துள்ளதாக பாடசாலையிலுள்ள ஆவணங்களின் மூலம் அறிய முடிகின்றது. இந்நிலையில் 1816 இல் இலங்கைவந்த அமெரிக்க மிஷனறிமார் தமது செயற்பாடுகளை யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டபோது உருவாக்கப்பட்டதே யா/மெதடிஸ்ற் மத்திய பாடசாலை(யா/மத்திய கல்லூரி) இப்பாடசாலைக்குரிய மூலாதாரப் பாடசாலைகளாக அமைக்கப்பட்ட ஐந்து பாடசாலைகளுள் ஒன்றை மேலே கூறப்பட்ட சைவத் தமிழ்ப் பாடசாலைக்குத் தென்புலத்தில் அமெரிக்க மிஷனறிமாரால் அமைக்கப்பட்டு சேணியதெரு மெதடிஸ்ற் மிஷன் பாடசாலை என்ற பெயருடன் இயங்கி வந்தது. இக் காலத்தில் 500க்கும் மேற்பட்ட மாணவர்களைக்கொண்ட பாடசாலையாகவும் வளர்ச்சி கண்டது.

இந்நிலையில் இலங்கை அரசின் பாடசாலை தேசிய மயமாக்கல் சட்டத்தின்கீழ் 1962.03.15 ஆந் திகதி இவ்விரு பாடசாலைகளையும் அரசு பொறுப்பேற்றதுடன் இரண்டும் ஒன்றிணைக்கப்பட்டு யா/சேணியதெரு ஆங்கிலப் பாடசாலை என்ற பெயருடன் விளங்கி வந்தது. இக் காலத்தில் திரு.ஜோன் சின்னத்தம்பி அழகரெத்தினம் என்பவர் அதிபராக இருந்தார். இக் காலத்தில் 27 ஆசிரியர்களும் எண்ணூற்றியிருபத்தெட்டு மாணவர்களையும் கொண்ட இப் பாடசாலை இயங்கியது. திரு.எம்.பாஸ்கரதேவன் அதிபராக இருந்த காலத்தில் 1972 ஆம் ஆண்டில் கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டதுடன் 20.03.1973 இல் யா/சன்மார்க்க மகா வித்தியாலயம் என்ற பெயர் மாற்றமும் பெற்றது.

1982 1992 வரை அதிபராக இருந்த திரு எஸ்.நடேசபிள்ளை அவர்கள் அதிபராக விளங்கிய காலத்தில் வண்ணை தெற்கு கொத்தணி அமைப்புடன் இப் பாடசாலை இணைக்கப்பட்டது. இக் காலத்தில்

அயலில் யா/இந்துக் கல்லூரி, யா/வேம்படி மகளிர் கல்லூரி ஆகிய இரண்டும் தேசிய பாடசாலைகளாகத் தோற்றம் பெற்றதனாலும், ஏனைய பிரபல கல்லூரிகளின் வளர்ச்சியினாலும் இச்சூழலில் வாழும் மக்கள் பெரும்பாலும் தம் பிள்ளைகளை இப் பாடசாலைகளில் சேர்ப்பதற்கு முன்வராத நிலையில் படிப்படியாக மாணவர்தொகை குறையலாயிற்று. திரு.சி.மாணிக்கராஜா அதிபராக இருந்த காலத்தில் பாடசாலைக்கு பல்வேறு பௌதிக வளங்களையும் பெருக்கினார். 1994 இல் 370 மாணவர்களும் 2005 ஆம் ஆண்டில் 253 மாணவர்களாக இருந்து படிப்படியாகக் மாணவர் தொகை குறைவடைந்து வருகின்றது.

**ஸ்தாபித்த நோக்கம் :-**

இப் பிரதேசத்தில் வாழும் பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வியையும் ஒழுக்க விழுமியங்களையும், ஆன்மீகக்கல்வியினையும் வழங்கி நற்பிரஜைகளை உருவாக்குதல்.

**வளர்ச்சி :-**

கல்வி பெறுபேறுகளின் வளர்ச்சியுடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் வளர்ச்சியடைந்துள்ளது. 1992 காலப்பகுதிகளில் க.பொ.த உயர்தரம் கற்ற மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று மேற்படிப்பை தொடர்ந்தனர். சாதாரண தரம் வரை இருந்த வகுப்புக்கள் உயர்தரம் வரை வளர்ச்சி பெற்றது. 1973 இல் **1C** தரத்தைப் பெற்றது. 2003 இன் பின்னர் தற்போது பௌதிக வளங்களும் வளர்ச்சி கண்டுள்ளது. 2005 இல் ஒரு மாணவர் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தார். 2014 இல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வரலாற்றில் முதன்முறையாக மூன்று மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டதுடன் ஒரு மாணவன் 182 புள்ளிகளைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். 2015 இல் 6 மாணவர்கள் தோற்றி ஒரு மாணவி 155 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்தார். 2014 இல் நடைபெற்ற க.பொ.த(உ/த) பரீட்சைக்கு மூன்று மாணவர்கள் தோற்றி மூவருமே சித்திபெற்றுள்ளதுடன் ஒரு மாணவி 3**A**, இன்னுமொருவர் 2ஏ1பி எடுத்து பாடசாலை வரலாற்றில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றவர்களாகத் திகழ்கின்றனர். அதேவேளை 2014 க.பொ.த (உ/த) பரீட்சைப்பெறுபேறுகளினடிப்படையில் பரீட்சைத்

திணைக்களத்தினால் வெளியீடுப்புபுடுடு புர்டுசுர்ஜலுச் சேயுலுர்று்றுகைச் சுட்டிகளின்படி 20 மாணவர்களுக்குக் குறைவாகத் தோற்றிய பாடசாலைகளுள் கலை, வர்த்தகப் பிரிவில் யா/சன்மார்க்க மகா வித்தியாலயம் வடக்கு மாகாணத்தில் இரண்டாம் நிலையினைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். 2015 இல் நடைபெற்ற க.பொ.த(உ/த) பரீட்சைக்கு மூன்று மாணவர்கள் தோற்றி மூவருமே சித்திபெற்றுள்ளதுடன் ஒரு மாணவி 3A, பெற்று மாவட்டநிலையில் 9 இடத்தையும்பெற்றுள்ளமை பாடசாலை வரலாற்றில் ஒரு சாதனையாகும். இப் பாடசாலையானது 2014 இல் பிரிட்டிஸ் கவுன்சிலால் சர்வதேச விருது வழங்கப்பட்டது. 2014 இல் பாடசாலை ஆய்வுகூடங்களுக்கான போட்டியில் எமது ஆய்வுகூடத்திற்கு விருது வழங்கப்பட்டது. 2014 இல் பாடசாலை சிறந்த செயற்பாட்டிற்கான **(BEST PRACTICES)** சான்றிதழ் மத்திய கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டது.

**சவாலான கட்டங்கள் :-**

பாடசாலை நகரப் பாடசாலையாக இருந்தாலும் மாணவர் தொகை வெகுவாகக் குறைந்து செல்கின்றமை பாடசாலை எதிர்நோக்கும் முக்கிய சவாலாகக் காணப்படுகின்றது.

**தற்போதைய சமூக எதிர்பார்ப்பு :-**

- பொதுப்பரீட்சைகளில் மாணவர் பெறுபேற்றை மேலும் உயர்த்துதல்
- இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சாதனை படைத்தல்
- பண்புள்ள நற்பிரஜைகளை உருவாக்குதல்.

## பாடசாலையின் ஆளணி விபரம்

| | |
|---|---|
| அதிபர் ............................ | 01 |
| உபஅதிபர் ................ | 01 |
| பட்டதாரி ஆசிரியர்கள்....... | 17 |
| பயிற்றப்பட்ட ஆசிரியரகள்... | 13 |
| கல்விசாரா ஊழியர்கள்....... | 02 |

# ஆசிரியர் குழாம்



| பெயர் | தகைமை |
|---|---|
| திரு.முருகேசு முரளிதரன் (அதிபர்) | B.A, Dip. in Ed. , M.Ed. சைவப்புலவர், சித்தாந்தபண்டிதர் |
| திருமதி சிவபாதவிருதையர் வனஜா(உ.ப.அதிபர்) | Eng . Trd. |
| திருமதி சற்குணானந்த சர்மா இராஜஸ்ரீ | Music Trd. |
| செல்வி சின்னத்தம்பி மாலினி | B.A, Dip. in Ed. M.A., |
| திருமதி ரகுபதி சொரூபவதி | Pri. Trd.B.A. , Dip. in Ed. |
| திருமதி லோகேஸ்வரன் இராசநிதி | Pri. Trd.,B.A. , Dip. in Ed. |
| திரு ஜோசப் அன்ரன் பிறின்ஸ் | B.Sc. |
| திருமதி சந்திரசேகரன் நளாயினி | B.A. , Dip. in Ed. |
| திருமதி சாந்தலிங்கம் வாசுகி | Music Trd. |
| திருமதி தியாகராஜா புஸ்பராணி | B.A. , Dip. in Ed. |
| திருமதி கஜநிதிபாலன் யட்சாயினி | B.A. , Dip. in Ed. |
| திருமதி குகனேசன் சௌந்தரராணி | Home Eco. Trd. |
| திரு வாசேஸ்பதிராஜா லோகேஸ்வரன் | Sci. Trd. |
| திருமதி இராதாகிருஸ்ணன் சாந்தாதேவி | Pri. Trd. |
| திருமதி தயாகரன் யூலிஆன் | B.A. , Dip. in Ed. |
| திருமதி உதயணன் ரதினி | B.A |
| திருமதி ஸ்ரீகந்தராஜா தயாநிதி | B.Com. |
| திருமதி மகேந்திரன் மல்லிகாதேவி | Sci. Trd. |
| திருமதி ஹரிச்சந்திரா எமிபெல் சுபாசினி | B.A. , Dip. in Ed. |
| திருமதி சுகுமார் குணபாலதேவி | Pri. Trd. |
| திருமதி சுகேந்திரன் ராகினி | B.Com. Dip. in Ed. |
| திருமதி ரமேஸ் உதயராணி | Maths Trd. |
| திருமதி சிறீதரன் சிவரஞ்சினி | B.A,Dip.in Ed.M.A., M.Ed. |
| திருமதி வைதேகி கனகராஜா | B.Ed |
| திருமதி சதீஸ்குமார் மதிவதனி | N.D.Teaching |
| திருமதி பிரதீபன் சுகந்தினி | B.Com. Dip. in Ed. |
| திருமதி சுந்தரலிங்கம் இராஜேஸ்வரி | Pri. Trd. |
| திரு. பொன்னுத்துரை ஸ்ரீபாலன் | Agri. Trd. |
| திருமதி குகானந்தம் அருட்செல்வி | B.A. , Dip. in Ed. M.Ed. |
| திருமதி பரணீதரன் தயாழினி | B.A |
| திருமதி தேவேந்திரன் நாகேஸ்வரி | பாடசாலைப் பணியாளர் |
| திரு கந்தையா புஸ்பநாதன் | காவலாளி |

## இடமாற்றம் பெற்றுச் சென்றோர்

**ஆசிரியர்கள்:**

திருமதி பு. முருகதாஸ் : யா/ கந்தர்மடம் சைவப் பிரகாச வித்.
திருமதி ஜெ. பிரபாகரன் : யா/ நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தி.
திருமதி வ. சிவராசா : யா/ இந்து மகளிர் கல்லூரி
திருமதி க. நிர்மலகுமார் : யா/ நாவாந்துறை றோ.க.ம.வி.

**கல்விசாரா ஊழியர்கள்**

செல்வி சொ. ஜீன் மார்கிரட் : யா/ இந்துமகளீர் ஆரம்ப பாடசாலை
திரு க. விஜயபாலன் : யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தி.

**பதவி உயர்வு பெற்றுச் சென்றோர்**

திருமதி வ. அருட்செல்வன் - அதிபர் தரம் III
யா/புங்குடுதீவு சுப்பிரமணியம் மகளீர் ம.வி.

**ஓய்வு பெற்றுச் சென்றோர்**

செல்வி முத்துக்குமாரசாமி செல்வராணி B.A.(Hons.)

## பரீட்சைப் பெறுபேறுகள்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

| | 2014 | 2015 |
|---|---|---|
| தோற்றியோர் | 08 | 06 |
| சித்தியடைந்தோர் | 03 | 01 |
| எழுபது புள்ளிக்கு மேல் | 03 | 04 |

க.பொ.த.(சாதாரணதரப் பரீட்சை)

| | 2014 | 2015 |
|---|---|---|
| தோற்றியோர் | 07 | 15 |
| சித்தியடைந்தோர் | 03 | 08 |
| சிறந்த பெறுபேறு | **2A,1B,1C,4S** | **1A,1B,4C,2S** |

க.பொ.த.(உயர்தரப் பரீட்சை)

| | 2014 | 2015 |
|---|---|---|
| தோற்றியோர் | 03 | 03 |
| சித்தியடைந்தோர் | 03 | 03 |
| சிறந்த பெறுபேறு | **3A, 2A1B** | **3A** |

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

சிறந்த பெறுபேறு பெற்றோர்

| புள்ளிகள் | 2014 | 2015 |
|---|---|---|
| 182 | மூர்த்தி டிலக்ஷன் | |
| 167 | திலகராஜா கிருஷாந் | |
| 156 | இரத்தினசிங்கம் கிருஷாந் | |
| 155 | | சந்துரு டிலக்ஷி |

## க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை

### சிறந்த பெறுபேறு பெற்றோர்

| புள்ளிகள் | 2014 | 2015 |
|---|---|---|
| **2A,1B,1C,4S** | டயானா நாகவிமலசிறி | |
| **1A,1B,4C,2S** | | கோசலன் இராசையா |

## க.பொ.த.உயர்தரப் பரீட்சை

### சிறந்த பெறுபேறு பெற்றோர்

| புள்ளிகள் | மாவட்டநிலை | 2014 | 2015 |
|---|---|---|---|
| **3A** | 21 | சோபிகா ஐஙகரன் | |
| **2A,1B** | 97 | பேபி சகிலா | |
| **3A** | 9 | | கீர்த்திகா நந்தகுமார் |

### பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள

| 2014 | 2015 |
|---|---|
| சோபிகா ஐங்கரன் | கீர்த்திகா நந்தகுமார |
| பேபிசகிலா முத்துக்குமார் | |

# 2014 2015 இல் பல்கலைக்கழக அனுமதி பெற்ற எமது மாணவர்கள்



ஐ. சோபிகா



ந. கீர்த்திகா



மு. பேபிசகிலா

# புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்றோர்



மூ. டிலக்ஷன்



தி. கிருஷாந்



இ. கிருஷாந்



ச. டிலக்க்ஷி

# சாதனைப் பதிவு

## மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்

க.பொ.த(உ/த)-2014 பரீட்சைப் பெறுபேறுகளினடிப்படையில்
பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட
பாடசாலைச் செயலாற்றுகைச் சுட்டிகளின்படி
இருபது மாணவர்களுக்குக் குறைவாகத் தோற்றிய பாடசாலைகளுள்
கலை, வர்த்தகப் பிரிவில்

**யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்**

வடக்கு மாகாணத்தில்

**இரண்டாம் நிலையினைப்**

பெற்றமையினைக் கௌரவித்து இச்சான்றிதழ்
வழங்கப்பெற்றது.

பி. செல்வின் இரேனியஸ்
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
(கல்வி அபிவிருத்தி)
மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

செ. உதயகுமார்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

# சாதனைப் பதிவுகள் சில...






# சாதனைப் பதிவு




# நிகழ்வுப் பதிவு



# ஆரம்பபிரிவு

ஆரம்பக் கல்விகற்கும் மாணவர்களில் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆரம்பக்கல்வி மாணவர்கள் தங்களது ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் சித்திரப்போட்டி, விரைவுகணிதப்போட்டி, திருக்குறள் மனனப்போட்டி என்பவற்றில் மாணவர்கள் பங்குபற்றியுள்ளனர்.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் உபகரணக்கண்காட்சி, மாணவர் உபகரணக் கண்காட்சிகளிலே பங்குபற்றி சான்றிதழ்கள் பெற்றுள்ளனர்.

உலக சிறுவர் தினத்தையொட்டி பாடசாலையில் சிறுவர் தினம் கொண்டாடப்பட்டு மாணவர்களுக்கு அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டன. பாடசாலையில் கலாசார நிகழ்வுகளில் மாணவர் பங்குபற்றி மகிழ்ந்தனர். மாணவர்களின் பிரச்சினைகள் இனம்கண்டு வழிகாட்டல் ஆலோசனையும் வழங்கப்பட்டுவருகிறது.

மெல்லக்கற்கும் மாணவர், விசேடதேவையுடைய மாணவர்களை கவனித்து கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஊக்கம் கொடுத்து வழிப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 80% மான மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்றங்கள்

**இந்து மன்றம்**

பொறுப்பாசிரியர் : திருமதி பு. தியாகராஜா
தலைவர் : செல்வி ந. திலக்சனா
செயலாளர் : செல்வி தெ. கேஜினி
பொருளாளர் : செல்வன் யோ. மன்மதகரன்

கடந்த ஆண்டு இந்துமன்றம் தைப்பொங்கல் விழாவினை சிறப்பாக செயற்படுத்தியதோடு ஆடிப்பிறப்பையும் எமது கலாசார முறைகளோடு பாடசாலையில் நடைமுறைப்படுத்தியது. திருக்கேதீஸ்வர ஆலயம், மடுமாதா தேவாலயம் என்பவற்றுக்கு பயணம் மேற்கொண்டது. அரசடி விநாயகர் ஆலய மூன்றாம் நாள் நவராத்திரி விழாவினை சிறப்பாக கொண்டாடியதோடு பாடசாலை நவராத்திரி விழாவை பல கலைகளோடு நடாத்தியது. அத்தோடு பாடசாலை, கோட்டம், வலய மட்ட சைவநெறி போட்டிகளில் பங்குபற்றி சான்றிதழ்கள் பெற்றமை. பாடசாலை மட்டத்தில் நாயன்மார்களின் குருபூசை தினங்கள் சமயப் பெரியார்களின் தினங்கள் இந்து மன்றங்கள் செயற்படுத்தப்பட்டது.

**கிறிஸ்தவ மன்றம்**

பொறுப்பாசிரியர் : திருமதி ஹ.எ. சுபாசினி
தலைவர் : செல்வி வி. சா. நிருஷாலினி
செயலாளர் : செல்வி இ. ஜெரோமி

இம் மன்றமானது மாணவரிடையே சமய ஆற்றலையும் , ஆன்மீகத்தையும் வளர்த்து வருகின்றது. பாடசாலையில் நடாத்தப்படும் ஒளிவிழா, மாணவர்களின் கலை நிகழ்வுடன் சிறப்பாக நடைபெற்றது.

**தமிழ் மன்றம்**

பொறுப்பாசிரியர் : செல்வி சி. மாலினி

தலைவர் : செல்வி ந. கீர்த்திகா

செயலாளர் : செல்வி யோ. தர்சிகா

தமிழ் மன்ற நிகழ்வில் வகுப்பு ரீதியாக அனைத்து மாணவரும் பங்கேற்று வருகின்றன. தமிழ் திறன் போட்டிகள் மாடசாலை மட்டத்தில் நடைபெற்று மாணவர்கள் கோட்ட, வலய, மாகாண மட்டங்களுக்கும்

அனுப்பப்படுகின்றார்கள். 2014 இல் குறுநாடகப்போட்டியில் பிரிவு 4 கோட்ட, வலய மட்டங்களில் முதலாம் இடத்தினையும், மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தினையும் பெற்று செல்வி ச. சண்கீதா வெண்கல பதக்கத்தினைப் பெற்றுக்கொண்டார். செல்வி அனுசியா பேச்சு பிரிவில் கோட்டமட்டத்தில் முதலாம் இடத்தினையும் , வலய மட்டத்தில் மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டார். இத்தகைய செயற்பாடுகளால் க.பொ.த. சாதாரணதர , க.பொ.த. உயர்தர பெறுபேறுகள் 100% சித்தியைப் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**கணித மன்றம்**

பொறுப்பாசிரியர் : திருமதி உ. ரமேஷ்
தலைவர் : செல்வன் லக்ஷன்
செயலாளர் : செல்வன் கோகுலன்

மாணவர்களின் கணித அறிவை மேம்படுத்தும் நோக்கில் எமது பாடசாலையில் கணித மன்றம் இயங்கிவருகின்றது. இம் மன்றத்தினூடாக அடைவு மட்டத்தினை உயர்த்தும் நோக்கில் நாடகம், வினாடிவினா என மன்றச்செயற்பாடுகள்நகர்த்தப்பட்டன. அதன் காரணமாக கணிதபாட அடைவுமட்ட வீதமும் அதிகரிக்கப்பட்டது.

**விஞ்ஞான மன்றம்**

பொறுப்பாசிரியர் : திரு வா. லோகேஸ்வரன்
தலைவர் : செல்வி இ. சுபாசினி
செயலாளர் : செல்வி ச. நிதர்சனா

இன்றைய நவீன தொழிநுட்பயுகத்திற்கு ஏற்ப மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கை, மேம்பம்படுத்தும் வகையில் விஞ்ஞான மன்றம் வருடம் தோறும் நடைபெற்று வருகிறது. வருடம் தோறும்

விஞ்ஞான வினாடிவினாப் போட்டிக்கு மாணவாகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டு போட்டியில் பங்குபெறச் செய்யப்படுகின்றனர். 2014 ஆம் ஆண்டு வலயமட்ட விஞ்ஞான ஆய்வுகூடப்போட்டியில் எமது பாடசாலை இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**சுகாதார மன்றம்**

பொறுப்பாசிரியர் : திரு வா. லோகேஸ்வரன்
தலைவர் : செல்வன் இ. லக்ஷன்
செயலாளர் : செல்வன் க. கோகுலன்

இம்மன்ற நிகழ்வு மாதந்தோறும் நடைமுறைப் படுத்தப்பட்டுவருகிறது. பாடசாலைவளாக சிரமதானம், தனிநபர் சுகாதாரம், குடும்பசூழல் சுகாதாரம் பேணல், மாணவருக்கான சத்துணவு, சத்து மாத்திரை வழங்கல், மாணவர்களின் உடல் உளநல மேம்பாடு, டெங்கு தொடர்பான விழிப்புணர்வூட்டல் செயற்பாடுகள் இம்மன்றத்தினால் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்டது.

**அழகியல் மன்றம்**

பொறுப்பாசிரியர் : திருமதி இ. சற்குணானந்தசர்மா
திருமதி அ. குகானந்தம்
தலைவர் : செல்வி யோ. தர்சிகா
செயலாளர் : செல்வன் யோ. மன்மதகரன்

எமது பாடசாலையில் மாதாந்தம் நடக்கும் மன்ற நிகழ்விலும் மாணவர்களின் இசைக்கலையை மன்ற நிகழ்விலும் மாணவர்களின் இசைக்கலையை வளர்க்கும் நோக்குடன் நிகழ்ச்சிகள் ஒழுங்குபடுத்தப்பட்டு நடைபெறுகின்றன. பாடசாலைக்கு வெளியே பண்ணிசை நிகழ்வுகளில் பங்குபற்றுதல், ஆலயங்களில் பஜனைகள் இசை நிகழ்ச்சிகளில் பங்குபற்றுதல் மேலும் தமிழ்த்தினப் போட்டிகளில் கோட்டமட்டத்தில் நாட்டார்பாடல்களில் 3ம் இடத்தினையும் ஏனைய

இசை நிகழ்ச்சிகளுக்கும் மாணவர்கள் ஆற்றுப்படுத்தப்படுகின்றனர். இவ்வாறே சித்திரபாடத்திலும் மாணவர்கள் போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றியிருந்தனர். ச. ஹரிஷ் DSI நிறுவனத்தால் நடாத்தப்பட்ட சித்திரப்போட்டியில் தேசியமட்டத்தில் பங்குபற்றி பரிசிலைப் பெற்றுக்கொண்டனர்.

**தகவல் தொழினுட்ப மன்றம்**

| | | |
|---|---|---|
| பொறுப்பாசிரியர் | : | திரு. ஜே. அன்ரன் பிறின்ஸ் |
| | : | திருமதி. எஸ் பிரதீபன் |
| தலைவர் | : | செல்வன் ஜெ. டனுசன் |
| செயலாளர் | : | செல்வி. மு. பார்த்திபா |
| பொருளாளர் | : | செல்வி. இ. கௌசல்யா |

எமது பாடசாலைக்கு 2009 ம் ஆண்டு 20 கணினிகள் கொண்ட கணினி பயிற்சி நிலையம் ஒன்று **SEMP Project** மூலமாகக் கிடைக்கப்பெற்றது, எமது பாடசாலைக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். இந்த பயிற்சி நிலையத்தினுடாக எமது பாடசாலை மாணவர்கள் நவீன கற்றல் செயற்பாட்டையும் கணனியை இயக்கும் திறனையும் பெறுகின்றனர். மேலும் பாடசாலை விலகிய மாணவர்களுக்கான மாலை நேர வகுப்புக்கள் நடாத்தப்பட்டு சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது. அயற்பாடசாலை ஆசிரியர்களுக்கான ஆசிரியர் மட்ட செயற்பாட்டுக்கான கணினிப் பயிற்சிகள் எமது பாடசாலை கணினி பயிற்சி நிலையத்தினூடாக வழங்கப்பட்டும் வருகிறது.

**சமூகவிஞ்ஞான மன்றம்**

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர் | : திருமதி ந. சந்திரசேகரன் |
| தலைவர் | : பா. வினோதா |
| செயலாளர் | : நா. டயானா |

மாணவர்களின் சமூகவிஞ்ஞான அறிவை பெருக்கும் வகையில் எமது பாடசாலையில் இம்மன்றம் செயற்பட்டுவருகின்றது. மாணவமன்ற நிகழ்வுகளின்போது பல்வேறு நிகழ்வுகளை நடாத்தி மாணவர்களின்

செயற்பாட்டுக்கு ஊக்கமளித்து வருகின்றது. வருடந்தோறும் நடைபெற்றுவரும் சமூகவிஞ்ஞானப்போட்டிக்கு மாணவர்கள் பங்குபற்றி அதில் ந.கீர்த்திகா ச.கிருசாந், ந.ஜெயாலன் கோட்ட,வலய மட்டத்தில் வெற்றிபெற்று மாகாணமட்டப்போட்டியில் பங்குபற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

## இணைபாடவிதான செயற்பாடுகள்

**விளையாட்டுத்துறை**

பொறுப்பாசிரியர் : திருமதி ய. கஜநிதிபாலன்

எமது பாடசாலைக்கென்று மைதான வசதிகள் இல்லாவிடினும் பிற பாடசாலைகளில் மைதான வசதிகளை பெற்றுக்கொண்டு மாணவர்களை விளையாட்டுத்துறையில் பயிற்சியளிக்கப்பட்டு பாடசாலைமட்ட கோட்ட, வலய போட்டிகளில் மாணவர்கள் பங்கெடுத்து வருகின்றனர் இதற்கு இத்துறை ஆசிரியர்கள் அக்கறை எடுத்துவருவது குறிப்பிடத்தக்கது.

**பான்ட் வாத்தியம்**

பொறுப்பாசிரியர் : திருமதி ய. கஜநிதிபாலன்

எமது பாடசாலையில் நடைபெறும் சிறப்பு நிகழ்வுகளில் விருந்தினர்களை வரவேற்பதிலும் விழாக்களின் போது தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி வருகின்றனர். இவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**வழிகாட்டலும் ஆலோசனையும்**

பொறுப்பாசிரியர் : திருமதி வா. சாந்தலிங்கம்

எமது மாணவர்களின் உடல் உளத் தேவைகள் இனங்காணப்பட்டு அவர்களுக்கான சீர்மிய நடவடிக்கைகள்

# நிகழ்வுப் பதிவுகள் சில...





# நிகழ்வுப் பதிவுகள் சில...





மேற்கொள்ளப்பட்டன. பாடசாலையில் கடந்த ஆண்டிற்கான உளவளத்தினம் கொண்டாடப்பட்டது. அத்துடன் மாணவர்களுக்கான போதைப்பொருள் பாவனை தடுப்பு தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கும் ஒழுங்குசெய்யப்பட்டு நடாத்தப்பட்டது.

**கட்டாய வரவுக்குழு**

பாடசாலைக்கு ஒழுங்காக வருகைதராத மாணவர்கள் இனங்காணப்பட்டு பெற்றோருடன் கலந்துரையாடப்பட்டும் , முறைசாராக் கல்விப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டும் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு மாணவர்களின் வரவு அதிகரிக்கப்பட்டது.

**மாணவ முதல்வர் குழு**

மாணவர்களின் ஒழுங்கு கட்டுப்பாடுகளை பாடசாலையில் மேற்பார்வை செய்வதோடு தலைமைத்துவப் பயிற்சிகளிலும் பங்கு கொண்டு தமது வாண்மையை விருத்தி செய்து வருகின்றனர்.

**பாடசாலை முகாமைத்துவக் குழு**

01. திரு மு. முரளிதரன் (அதிபர்)
02. திருமதி வ. சிவபாதவிருதையர் (உப அதிபர்)
03. திருமதி பு. தியாகராஜா
04. திருமதி ரா. சுகேந்திரன்
05. திருமதி ந. சந்திரசேகரன்
06. திருமதி யூ. தயாகரன்
07. திருமதி ய. கஜநிதிபாலன்
08. திருமதி சௌ. ரகுபதி
09. திருமதி சா. இராதாகிருஷ்ணன்
10. திருமதி வா. சாந்தலிங்கம்

11. திருமதி இ. சற்குணாந்தசர்மா

12. திரு. அன்ரன் பிறின்ஸ்

13. செல்வி சி. மாலினி

**பாடசாலை அபிவிருத்திக் குழு**

| | | |
|---|---|---|
| தலைவர் | : திரு மு. முரளிதரன் | (அதிபர்) |
| செயலாளர் | : திருமதி த. செல்வறயனி | (பெற்றோர்) |
| பொருளாளர் | : திருமதி ரா. சுகேந்திரன் | (ஆசிரியர்) |
| வலயப்பிரதிநிதி: | திரு த. சிவகுமார் | (ஆசிரிய ஆலோசகர்) |
| உறுப்பினர்கள்: | | |
| | திருமதி ந. சந்திரசேகரம் | (ஆசிரியர்) |
| | செல்வி சி. மாலினி | (ஆசிரியர்) |
| | திருமதி பு. தியாகராஜா | (ஆசிரியர்) |
| | திருமதி சௌ. ரகுபதி | (ஆசிரியர்) |
| | திரு க. கணேசநாதன் | (பெற்றோர்) |
| | திரு ச. சந்திரசேகர் | (பெற்றோர்) |
| | திருமதி N. சுபா | (பெற்றோர்) |
| | செல்வி சி. ரேணுகா | (பழைய மாணவர்) |
| | செல்வி சி. பிறேமானந்தி | (பழைய மாணவர்) |

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

தலைவர் : திரு மு. முரளிதரன்

செயலாளர் : திருமதி த. செல்வறயனி

பொருளாளர் : திருமதி ரா. சுகேந்திரன்

**ஒழுக்காற்றுக் குழு**

திருமதி ய. கஜநிதிபாலன்

திருமதி வா. சாந்தலிங்கம்

திரு வா. லோகேஸ்வரன்

**மாணவர் பாராளுமன்றம்**

செயலாளர் நாயகம்:- திரு. மு. முரளிதரன் (அதிபர்)

பிரதிச் செயலாளர் நாயகம் (அபிவிருத்தி) :- திருமதி. ராகினி சுகேந்திரன்

பிரதிச் செயலாளர் நாயகம் (நிருவாகம்) :- திருமதி. யூலிஆன் தயாகரன்

பிரதிச் செயலாளர் நாயகம் (ஒழுக்கம்) :- திருமதி. நளாயினி சந்திரசேகரன்

சபா நாயகர் :- செல்வி மு. பார்த்தீபா

பிரதிச் சபா நாயகர் :- செல்வன். இ. லக்சன்

பிரதிச் செயற்குழுத்தலைவர் :- செல்வன்.இ.ரஜீபன்

பிரதம அமைச்சர் :- செல்வி. இ. சுபாசினி

சபை முதல்வர் :- செல்வன். ச. கிருஷாந்த்

இவர்களுடன் 10 அமைச்சர்களும் 10 பிரதி அமைச்சர்களும் செயற்குழு உறுப்பினர்களும் செயற்படுகின்றனர்.

# நன்றியுரை

2016 இன் பரிசளிப்பு நிகழ்வு இனிதே நிறைவேற அருள் புரிந்த வெங்கடேசப் பெருமாளை நன்றியுடன் நினைவு கூர்ந்து எமது பாடசாலையின் அழைப்பை ஏற்று தனது வேலைச்சுமையின் மத்தியிலும் இங்கு வருகைதந்து இவ்விழாவினை சிறப்புற நடாத்த உதவிய பிரதமவிருந்தினர் வவுனியா வடக்கு வலயத்தின் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் எமது பாடசாலையின் கல்விமேம்பாட்டிற்காக உழைத்து வரும் கல்வி அபிவிருத்திப்பிரிவு பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு மாணிக்கராஜா அவர்கள் எமது அழைப்பிற்கு மதிப்பளித்து இங்கு வருகைதந்து இவ்விழாவை சிறப்பித்தமைக்காக அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது பாடசாலையுடன் தொடர்புகொண்டு பாடசாலைக் கல்வி விருத்திக்கு ஊக்கமளித்து உதவிவரும் யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர், பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப்பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்.

மாணவரின் ஒழுக்க வளர்ச்சியிலும், கல்வி வளர்ச்சியிலும் உயர் பெறுபேற்றைப்பெற அயராது தமது உழைப்பை நல்கி நிற்கும் அதிபர் அவர்களுக்கும் மற்றும் உபஅதிபர், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்.

இப்பரிசளிப்புத் தினத்தையொட்டி நிதியுதவி வழங்கிய பழையமாணவி திருமதி சிவலிங்கம் ஜெயந்தி (சுவிஸ்) அவர்களுக்கும், பல்கலைக்கழகத்திற்கு தெரிவானோருக்கான பழைய மாணவர் அமரர் பஞ்சநாதன் ஞாபகார்த்தப் பரிசிலை வழங்கிய அவர் தம் குடும்பத்தினருக்கும், பாடசாலைக்குப் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் உதவிவரும் பழைய மாணவர் திரு.E.S.P.நாகரத்தினம், திரு.க.கணேசநாதன், சாயி இல்லம், மகளிர் அமைப்பு, கொனிக்கா நிறுவனம், விளையாட்டுப் போட்டியின்போது பல்வேறு வகையிலும் உதவும் அன்பர்கள் மற்றும் வேறு வகையில் உதவி வழங்கியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

நிறைவாக பாடசாலையின் வளர்ச்சிக்கு பல்வேறு வகையிலும் உதவிபுரிந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**செயலாளர்,**<br>
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**

# பரிசுத்தினம் ~ 2016
# பரிசுபெறுவோர் விபரம்

தரம் 2

| தொ.இல. | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 1 | இ.சர்மி | கணிதம், சுற்றாடல், தமிழ்மொழி, ஆங்கிலம், சைவநெறி |
| 2 | பௌ. பதீஹ் | இஸ்லாம் |

தரம் 3

| தொ.இல. | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 1 | ர. ரதிக்கா | கணிதம் |
| 2 | க. டிலக்ஷனா | தமிழ், சுற்றாடல், சைவநெறி |
| 3 | நி. ஹரிசாயினி | கிறீஸ்தவம் |
| 4 | தௌ. பாத்திமாதஸ்ரி | இஸ்லாம் |

தரம் 4

| தொ.இல. | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 1 | ர. ரதிக்கா | கணிதம் |
| 2 | க. டிலக்ஷனா | தமிழ், சுற்றாடல், சைவநெறி |
| 3 | நி. ஹரிசாயினி | கிறீஸ்தவம் |
| 4 | தௌ. பாத்திமாதஸ்ரி | இஸ்லாம் |

தரம் 5

| தொ.இல. | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 1 | ச. டிலக்ஷி | கணிதம், தமிழ், சுற்றாடல், சைவநெறி, ஆங்கிலம் |
| 2 | பி. தினேகாஸ் | கிறீஸ்தவம் |

தரம் 6

| தொ.இல. | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 1 | இ.தனுஸ்ராஜ் | சமயம், ஆங்கிலம்,கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், சித்திரம் |
| 2 | இ.கிரிசாந் | ஆங்கிலம், குடியுரிமை, சுகாதாரமும் உடற்கல்வியும், செயன்முறைத் தொழிநுட்பம் |
| 3 | ச. துஷானா | சங்கீதம் |
| 4 | சா. மதுசாளினி | கிறீஸ்தவம் |

தரம் 7

| தொ.இல. | மாணவர் பெயர் | பாடங்களு |
|---|---|---|
| 1 | தே. கோகிலேசன் | சமயம், ஆங்கிலம், கணிதம், தமிழ், புவியியல், சித்திரம் |
| 2 | இ. அனுசியா | சமயம், விஞ்ஞானம், வரலாறு, குடியுரிமை, சங்கீதம், சுகாதாரம், செயன்முறைத் தொழிநுட்பம். |

தரம் 8

| தொ.இல. | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 1 | ச. கிருஷாந் | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், வரலாறு, புவியியல், சித்திரம், செயன்முறைத் தொழிநுட்பம். |
| 2 | ந. ஜெயாலன் | ஆங்கிலம், விஞ்ஞானம், சித்திரம் |
| 3 | கு. வினித்தா | சங்கீதம் |

தரம் 9

| தொ.இல. | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 1 | கு.சோவியா | சமயம், தமிழ், கணிதம், புவியியல், சங்கீதம், சுகாதாரம், குடியுரிமை, செயன்முறைத் தொழிநுட்பம். |
| 2 | வி. கௌசல்யா | வரலாறு |
| 3 | சா. நிருசாளினி | கிறீஸ்தவம், ஆங்கிலம், சித்திரம் |

தரம் 10

| தொ.இல. | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 1 | ச. நிதர்சனா | சமயம், தமிழ், வரலாறு, புவியியல். |
| 2 | இ.லக்சன் | ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், ICT |
| 3 | த. பவித்திரன் | கிறீஸ்தவம் |
| 4. | உ. கலைவாணி | குடியுரிமை |

தரம் 11

| தொ.இல. | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 1 | இ. கோசலன் | தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, இந்துசமயம், வர்த்தகம், சித்திரம், ICT |
| 2 | யோ. மன்மதகரன் | ஆங்கிலம். |
| 3 | ச. கௌரி | புவியியல் |
| 4. | இ. ரஜீவன் | குடியுரிமை, விவசாயம் |
| 5 | கா. சிலோஜினி | சங்கீதம் |
| 6 | இ. சுபாசினி | மனையியல் |

தரம் 12

| தொ.இல. | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 1 | ந. ரிலக்ஷனா | தமிழ், இந்துநாகரிகம், அரசியல், GIT |
| 2 | பி.மிதுஸ்சலா | புவியியல், சித்திரம். |
| 3 | தே.கேசினி | ஆங்கிலம், பொதுஅறிவு |
| 4. | ச.ஜெனுஜா | சங்கீதம் |

தரம் 13


| தொ.இல. | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 1 | ந. கீர்த்திகா | தமிழ், இந்துநாகரிகம்,<br>புவியியல்,ஆங்கிலம், GIT, பொதுஅறிவு |
| 2 | க. கார்த்திகா | அரசியல் |
| 3 | யோ. தர்சிகா | சங்கீதம் |

**பல்கலைக்கழக அனுமதி பெற்றோருக்கான**
**(பழைய மாணவர்) அமரர் பஞ்சநாதன் நினைவுப் பரிசில்**

2014 சோபிகா ஐங்கரன்
பேபி சகிலா முத்துக்குமார்
2015 கீர்த்திகா நந்தகுமார்

**விசேட பரிசு பெறுவோர்**

நாகலக்ஷன் நாகேந்திரன்
அனுஷன் இராமச்சந்திரன்
கிருஷாந் சந்திரசேகர்
கிருசாந்தன் நாகவிமலஸ்ரீ



நன்றி!

ஷாம்பவி பதிப்பகம், யாழ். 2224143